**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுடலைவேல் முருகையா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | உதவி இயக்குநர், மருந்து கட்டுப்பாடு துறை, மதுரை மண்டலம் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2024.

( எதிரி ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை தொடர்ச்சி:

1. 22.10.2013 நாளிட்ட படிவம் – 17 தயார் செய்து படிவம் – 17 நகல் ஒன்றும் மாதிரி மருந்தின் ஒரு பகுதியையும் 3வது எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதலை படிவம் – 17 இன் பின் பகுதியில் பெற்றுக் கொண்டேன். அந்த படிவம் – 17 எண்:029156 – அ.சா.ஆ. 1. ஆகும். பகுப்பாய்விற்காக எடுக்கப்பட்ட மாதிரி மருந்து வாங்கியதற்கான கடன் பட்டியல் (Credit bill) எண்: SA 003376 – அ.சா.ஆ. 2. ஆகும். 22.10.2013 நாளிட்ட படிவம் 18 தயார் செய்து, அரசு பகுப்பு ஆய்வாளர், மருந்துகள் ஆய்வுக்கூடம், சென்னை – 6க்கு மாதிரி மருந்தின் ஒரு பகுதியை அனுப்பினேன். அந்த படிவம் 18 நகல் அ.சா.ஆ. 3 ஆகும்.

2. 25.10.2013, காலை 10.30 மணியளவில் 3 ஆம் எதிரி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு 1–ஆம் எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான Diltus Syp, தொ.எண்:DL013, த/நாள்:05/13, கா/நாள்:04/16 என்ற மருந்தினை அரசு பகுப்பாய்விற்காக 3 ஆம் எதிரி நிறுவனத்தின் Credit bill No SA 003415, நாள்: 25.10.2013, விலை ரூ.311/–க்கு பெற்றேன். அந்த Credit bill அ.சா.ஆ. 4. ஆகும். மேற்படி மாதிரி மருந்தினை 3 வது எதிரி முன்னிலையில் படிவம் – 17 தயார் செய்து படிவம் – 17 நகல் ஒன்றும் மாதிரி மருந்தின் ஒரு பகுதியையும் 3 வது எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதலை படிவம் – 17 இன் பின் பகுதியில் பெற்றுக் கொண்டேன். அந்த படிவம் –17 எண்:029158, நாள்:25.10.2013 – அ.சா.ஆ.5. ஆகும்.

3. மேலும் 3 ஆம் எதிரி நிறுவனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 1 ஆம் எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான 7 வகை ஆங்கில மருந்துகளை விற்பனை செய்யாமலிருக்க, 25.10.2013 நாளிட்ட படிவம் – 15 மூலம் முடக்கம் செய்து நகல் ஒன்றை 3 ஆம் எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதல் பெற்றேன். அந்த படிவம் – 15, எண்:4159, நாள்: 25.10.2013 –அ.சா.ஆ 6. ஆகும். படிவம் 15 இல் முடக்கம் செய்யப்பட்ட மருந்துகளுக்கான கொள்முதல் மற்றும் விற்பனை விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி, மருந்துகள் மற்றும் அழகு சாதனசட்டம் 1940 பிரிவு 22(1)(cca)இன் கீழ், 25.10.2013 நாளிட்ட குறிப்பாணை ஒன்றையும் 3 ஆம் எதிரியிடம் வழங்கி நகலில் ஒப்புதல் பெற்றேன். அது அ.சா.ஆ 7. ஆகும்.

4. 3 ஆம் எதிரி 25.10.2013 நாளிட்ட பதில் கடிதத்துடன் படிவம் 15 இல் முடக்கம் செய்யப்பட்ட மருந்துகளுக்கான கொள்முதல், விற்பனை பில்கள் மற்றும் 3 ஆம் எதிரி நிறுவனத்தின் மருந்து உரிமங்கள் ஆகியவற்றை ஒப்படைத்தார். அந்த 25.10.2013 நாளிட்ட பதில் கடிதம் அ.சா.ஆ.8. 3 ஆம் எதிரியின் மருந்து உரிமங்கள் படிவம் 20B, 21B அ.சா.ஆ. 9 ஆகும். 3 ஆம் எதிரி 2 ஆம் எதிரியிடமிருந்து மருந்து கொள்முதல் செய்த பில்களான 16.09.2013 நாளிட்ட பில் எண்.NL00047 – அ.சா.ஆ. 10, 26.08.2013 நாளிட்ட பில் எண்.NL00039 – அ.சா.ஆ. 11, 10.10.2013 நாளிட்ட பில் எண்.NL00057 அ.சா.ஆ. – 12, 27.09.2013 நாளிட்ட பில் எண்.NL00051 - அ.சா.ஆ. 13, 29.08.2013 நாளிட்ட பில் எண்.NL00040 அ.சா.ஆ. – 14, 22.07.2013 நாளிட்ட பில் எண்.NL00025 அ.சா.ஆ. – 15 ஆகும். 3 ஆம் எதிரியால் சமர்ப்பிக்கப்பட்ட கடையின் மருந்து உரிமங்கள், படிவம் 15 இல்

முடக்கம் செய்யப்பட்ட மருந்துகளுக்கான கொள்முதல் பில்கள் மற்றும் விற்பனை விவரங்கள் நகல் எடுக்கப்பட்டு நகல்களில் நானும் 3 வது எதிரியும் கையொப்பம் இட்டு அசல் ஆவணங்கள் அனைத்தும் 3 ஆம் எதிரியிடம் மேற்படி சட்டப்பிரிவு 22(2A)இன் படி ஒப்படைத்தேன். அதற்கான ஒப்புதலை 3 ஆம் எதிரியிடம் கடிதம் மூலம் பெற்றுக் கொண்டேன். அந்த கடிதம் அ.சா.ஆ.16 ஆகும்.

5. 3 ஆம் எதிரி நிறுவனத்தில் 25.10.2013 இல் பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட மாதிரி மருந்தினை 25.10.2013 நாளிட்ட படிவம் 18 தயார் செய்து பகுப்பாய்விற்கு அரசு பகுப்பாய்வாளர், மருந்துகள் ஆய்வுக்கூடம், சென்னை-6 க்கு அனுப்பினேன். அந்த படிவம் 18 அ.சா.ஆ.17 ஆகும்.

6. 25.10.2013, மாலை 4 மணியளவில் 4 ஆம் எதிரியான திருமலை பார்மாவில் ஆய்வு மேற்கொண்டு 1 ஆம் எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான Naccold plus, தொ.எண்:NS015, த/நாள்:05/13, கா/நாள்:04/16 என்ற மருந்தினை அரசு பகுப்பாய்விற்காக 4 ஆம் எதிரி நிறுவனத்தின் Credit bill No.NK005359, நாள்: 25.10.2013, விலை ரூ.310/-க்கு பெற்று, 25.10.2013 நாளிட்ட படிவம் – 17 தயார் செய்து படிவம் – 17 நகல் ஒன்றும் மாதிரி மருந்தின் ஒரு பகுதியையும் அப்போது அங்கு பணியில் இருந்த 6 வது எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதலை படிவம் – 17 இன் பின் பகுதியில் பெற்றுக் கொண்டேன். அந்த Credit bill எண்:NK005359, நாள்:25.10.2013 – அ.சா.ஆ. 18. ஆகும். அந்த படிவம் –17 எண்:029159, நாள்:25.10.2013 – அ.சா.ஆ.19. ஆகும்.

7. மேலும், 4 ஆம் எதிரி நிறுவனத்தில் ஆய்வின் போது இருந்த 1 ஆம் எதிரி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 6 வகையான அலோபதி மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது என்று 4 ஆம் எதிரியிடம் 25.10.2013 நாளிட்ட படிவம் 15 மூலம் முடக்கம் செய்து, அப்போது பணியிலிருந்த 6 ஆம் எதிரியிடம் நகல் ஒன்றை கொடுத்து ஒப்புதல் பெற்றேன். படிவம் 15 எண்:4160, நாள்:25.10.2013 – அ.சா.ஆ.20 ஆகும். படிவம் 15 இல் முடக்கம் செய்யப்பட்ட மருந்துகளுக்கான கொள்முதல், விற்பனை பில்களின் கார்பன் நகல் மற்றும் 4 ஆம் எதிரி நிறுவனத்தின் மருந்து உரிமங்களை 6 ஆம் எதிரி 25.10.2013 நாளிட்ட கடிதத்துடன் என்னிடம் சமர்ப்பித்தார். அந்த கடிதம் அ.சா.ஆ

21 ஆகும். 4 ஆம் எதிரியின் மருந்து உரிமங்கள் படிவம் 20B, 21B அ.சா.ஆ. 22 ஆகும். 4 ஆம் எதிரி 2 ஆம் எதிரியிடமிருந்து மருந்து கொள்முதல் செய்த பில்களான 18.09.2013 நாளிட்ட பில் எண்.DR00021 - அ.சா.ஆ. 23, 10.06.2013 நாளிட்ட பில் எண். DR00011 - அ.சா.ஆ. 24, 10.10.2013 நாளிட்ட பில் எண்.NL00056 - அ.சா.ஆ. 25, 22.07.2013 நாளிட்ட பில் எண்.NL00026 - அ.சா.ஆ. 26, 24.10.2013 நாளிட்ட பில் எண்.NL00061 - அ.சா.ஆ. 27 மற்றும் 27.09.2013 நாளிட்ட பில் எண்.NL00052 - அ.சா.ஆ. 28 ஆகும்.

8. 25.10.2013 இல் 6 ஆம் எதிரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் நகல் எடுக்கப்பட்டு நகல்களில் நானும் 6 வது எதிரியும் கையொப்பம் இட்டுஅசல் ஆவணங்கள் அனைத்தும் மேற்படி சட்டப்பிரிவு 22(2A)இன் படி 6 ஆம் எதிரியிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்புதலை 25.10.2013 நாளிட்ட கடிதம் மூலம் பெற்றேன். அந்த கடிதம் அ.சா.ஆ 29 ஆகும். 4 ஆம் எதிரியிடம் பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட மாதிரிக்கு 25.10.2013 நாளிட்ட படிவம் 18 தயார் செய்து பகுப்பாய்விற்கு அரசு பகுப்பாய்வாளர், மருந்துகள் ஆய்வுக்கூடம், சென்னை–6 க்கு அனுப்பினேன். அந்த படிவம் 18 அ.சா.ஆ.30 ஆகும்.

9. 1 ஆம் எதிரி நிறுவனத்திற்கு, மருந்து கட்டுப்பாடு இயக்குநர், சென்னை–6 அவர்களின் 28.03.2013 நாளிட்ட மருந்துகள் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு உடனடியாக தடை விதிக்கப்பட்ட உத்தரவின் நகல் ஒன்றினை 23.10.2013 நாளிட்ட கடிதத்துடன் நடவடிக்கைக்காகவும், அறிக்கைக்காகவும் மதுரை மண்டலம் மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் எனக்கு அனுப்பினார். அந்த மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் மற்றும் மருந்து கட்டுப்பாடு இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.எண்:12206/D1/1/2011, நாள்:28.03.2013 – அ.சா.ஆ – 31 மற்றும் 32 ஆகும்.

10. 04.11.2013 இல், காலை 10 மணியளவில் 3 ஆம் எதிரியின் நிறுவனத்தில் ஆய்வு செய்து 1 வது எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான Mangoferol Syrup, தொ.எண்:MF004, த/நாள்:07/13, கா/நாள்:01/15 மற்றும் Nacomox Capsules, தொ.எண்:NM003, த/நாள்:07/13, கா/நாள்:06/16 ஆகியன பகுப்பாய்விற்காக 3 ஆம் எதிரி

நிறுவனத்தின் Credit bill No. SA003565, நாள்: 04.11.2013, விலை ரூ.2809/–க்கு பெற்று, ஒவ்வொரு மருந்திற்கும் படிவம் – 17 தனித்தனியாக தயார் செய்து படிவம் – 17 நகல் ஒன்றும் மாதிரி மருந்தின் ஒரு பகுதியையும் 3 வது எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதலை படிவம் – 17 இன் பின் பகுதியில் பெற்றுக் கொண்டேன். அந்த Credit bill எண்:SA003565, நாள்:04.11.2013 – அ.சா.ஆ. 33. படிவம் –17 எண்:029165, நாள்:04.11.2013 – அ.சா.ஆ.34. படிவம் –17 எண்:029166, நாள்:04.11.2013 – அ.சா.ஆ.35 ஆகும்.

11. 3 ஆம் எதிரி நிறுவனத்தில் மாதிரி எடுத்தது போக மீதமிருந்த ஏற்கனவே படிவம் 15 இல் முடக்கம் செய்யப்பட்ட மற்றும் 3 ஆம் எதிரியால் விற்பனை செய்யப்பட்ட இடங்களில் இருந்து திரும்ப பெறப்பட்ட மருந்துகளை 3 ஆம் எதிரி மற்றும் இரண்டு தனிநபர் சாட்சிகளான தேனி, அல்லிநகரம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் முன்னிலையில் 04.11.2013 நாளிட்ட மகஜர் தயார் செய்து 7 வகையான 1 ஆம் எதிரி நிறுவனத்தின் தயாரிப்பு மருந்துகளை படிவம் – 16 மூலம் 3 ஆம் எதிரி நிறுவனத்திலிருந்து பறிமுதல் செய்தேன்.

12. அந்த படிவம் – 16, அதனுடன் இணைக்கப்பட்ட மருந்து விவரப் பட்டியல் மற்றும் மகஜர் ஆகியவற்றில் நானும் கையொப்பம் இட்டு, சாட்சிகள் மற்றும் 3 ஆம் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். அதன் நகல்களை 3–ஆம் எதிரியிடம் வழங்கி அதற்கான ஒப்புதல் பெற்றேன். அந்த படிவம்–16 எண்: 15005 – அ.சா.ஆ.36 ஆகும். அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துகள் விவரப் பட்டியல் அ.சா.ஆ.37 மற்றும் மகஜர் அ.சா.ஆ.38 ஆகும். பகுப்பாய்விற்கு எடுக்கப்பட்ட மருந்துகளுக்கு தனித்தனியாக படிவம் 18 தயார் செய்து அரசு மருந்துகள் பகுப்பாய்வாளர், சென்னை–6 ற்கு அனுப்பினேன். அந்த Mangoferol மருந்துக்கான படிவம் 18 அ.சா.ஆ.39 மற்றும் Nacomox மருந்துக்கான படிவம் 18 அ.சா.ஆ. 40 ஆகும்.

13. 04.11.2013 இல், பிற்பகல் 1 மணியளவில் 4 ஆம் எதிரியான திருமலை பார்மாவில் ஆய்வு செய்து, அங்கு இருந்த 1 வது எதிரியின் தயாரிப்பான Naccold Drops தொ.எண்:NDS008, த/நாள்:05/13, கா/நாள்:ஏப்ரல்/2016 மற்றும் Profital Syrup, தொ.எண்:PF003, த/நாள்:05/13, கா/நாள்:11/14, ஆகியன பகுப்பாய்விற்காக 4 ஆம் எதிரி

நிறுவனத்தின் Credit Bill No. NK005578, நாள்: 04.11.2013, விலை ரூ.1153/-க்கு பெற்று ஒவ்வொரு மருந்திற்கும் படிவம் – 17 தனித்தனியாக தயார் செய்து படிவம் – 17 நகல் ஒன்றும் மாதிரி மருந்தின் ஒரு பகுதியையும் அப்பொழுது பணியிலிருந்த 6 வது எதிரியிடம் கொடுத்து அதற்கான ஒப்புதலை படிவம் – 17 இன் பின் பகுதியில் பெற்றுக் கொண்டேன். அந்த Credit Bill எண்:NK005578, நாள்:04.11.2013 – அ.சா.ஆ. 41 ஆகும். படிவம் –17 எண்:029163, நாள்:04.11.2013 – அ.சா.ஆ.42 ஆகும். படிவம் –17 எண்:029164, நாள்:04.11.2013 – அ.சா.ஆ.43 ஆகும்.

14. 4 ஆம் எதிரி நிறுவனத்தில் மாதிரி எடுத்தது போக மீதமிருந்த ஏற்கனவே படிவம் 15 இல் முடக்கம் செய்யப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட இடங்களில் இருந்து 4 ஆம் எதிரியால் திரும்ப பெறப்பட்ட 1 ஆம் எதிரி நிறுவனம் தயாரித்த மருந்துகளை 4 ஆம் எதிரியிடமிருந்து 6 ஆம் எதிரி மற்றும் இரண்டு தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் 04.11.2013 நாளிட்ட மகஜர் தயார் செய்து படிவம் – 16 மூலம் பறிமுதல் செய்தேன். அந்த படிவம் – 16, அதனுடன் இணைக்கப்பட்ட மருந்து விவரப் பட்டியல் மற்றும் மகஜர் ஆகியவற்றில் நானும் கையொப்பம் இட்டு, சாட்சிகள் மற்றும் 6 ஆம் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். அதன் நகல்களை 6–ஆம் எதிரியிடம் வழங்கி அதற்கான ஒப்புதல் பெற்றேன். அந்த படிவம்–16 எண்: 15011 – அ.சா.ஆ.44. ஆகும். அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துகள் விவரப் பட்டியல் அ.சா.ஆ.45 மற்றும் மகஜர் அ.சா.ஆ.46 ஆகும். 4 ஆம் எதிரியிடம் பகுப்பாய்விற்கு எடுக்கப்பட்ட மருந்துகளுக்கு தனித்தனியாக படிவம் 18 தயார் செய்து அரசு மருந்துகள் பகுப்பாய்வாளர், சென்னை–6 ற்கு அனுப்பினேன். அந்த Naccold Drops மருந்துக்கான படிவம் 18 அ.சா.ஆ.47 மற்றும் Profital Syrup மருந்துக்கான படிவம் 18 அ.சா.ஆ.48 ஆகும்.

15. 04.11.2013 இல் 3 வது மற்றும் 4 ஆம் எதிரிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட மருந்துகளை 05.11.2013 இல் மாண்புமிகு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தேனியில் தனித்தனி மனுக்களின் வாயிலாக சமர்ப்பித்தேன். மருந்துகளை தங்கள் நிலைய பொறுப்பில் வைத்து புகார் நகலுடன் மீள சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டு அன்றைய தினமே மருந்துகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன். 3 ஆம் எதிரியிடமிருந்து பறிமுதல் செய்த மருந்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தற்கான மனு அ.சா.ஆ.49.

அந்த மனுவில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு அ.சா.ஆ 50. 4 ஆம் எதிரியிடமிருந்து பறிமுதல் செய்த மருந்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தற்கான மனு அ.சா.ஆ.51. அந்த மனுவில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு அ.சா.ஆ 52.

16. 1 ஆம் எதிரி நிறுவனத்திற்கு மருந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்கு மருந்து கட்டுப்பாடுத் துறையால் தடை விதிக்கப்பட்ட காலத்திற்கு பின்னரும், 1 ஆம் எதிரி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளை வாங்கி விற்பனைக்காக இருப்பு வைத்திருந்ததாகவும், விற்பனை செய்ததாகவும் தெரிய வந்ததால், 3 வது எதிரிக்கு 07.01.2014 அன்றும், 09.01.2014 அன்று 4 வது எதிரிக்கும் விளக்கம் கேட்டு பதிவுத் தபாலில் குறிப்பாணை ஒன்றை தனித்தனியாக அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல்கள் அ.சா.ஆ.53 மற்றும் அ.சா.ஆ.54 ஆகும்.

17. 3 வது எதிரி 20.01.2014 நாளிட்ட பதில் கடிதம் ஒன்றை அனுப்பினார். அந்த கடிதம் எனக்கு 23.01.2014 அன்று கிடைக்கப் பெற்றது. அந்த கடிதம் அ.சா.ஆ.55 ஆகும். அந்த பதில் கடிதத்தில் அவர் விற்ற மற்றும் இருப்பு வைத்திருந்த மருந்துகள் 2 வது எதிரியிடமிருந்து வாங்கியதாகத் தெரிவித்திருந்தார். 4 வது எதிரியிடமிருந்து நாளிடப்படாத பதில் கடிதம் 30.01.2014 அன்று எனக்குக் கிடைக்கப் பெற்றது. அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.56 ஆகும். அந்த பதில் கடிதத்தில் அவர் விற்ற மற்றும் இருப்பு வைத்திருந்த மருந்துகள் 2 வது எதிரியிடமிருந்து வாங்கியதாகத் தெரிவித்திருந்தார்.

18. பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்த Nacomox Capsules என்ற மருந்தானது தரமற்றது என்றும், போலியானது என்றும் 20.01.2014 தேதியிடப்பட்ட அரசுப் பகுப்பாய்வாளரின் படிவம்–13 அறிக்கை 23.01.2014 இல் எனக்குக் கிடைக்கப் பெற்றது. அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.57 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் 24.01.2014 அன்று பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்படடிருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டி மாதிரி எடுத்த நிறுவனமான 3 வது எதிரிக்கு விளக்கம் கேட்டு குறிப்பாணை ஒன்றை நேரில் வழங்கினேன். அத்துடன் படிவம் 13 ன் நகலையும் இணைத்து வழங்கினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.58 ஆகும்.

19. 3 வது எதிரி அந்த குறிப்பாணைக்கு 24.01.2014 அன்றே பதில் கடிதம் ஒன்றை கொடுத்தார். அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.59 ஆகும். அந்த பதில் கடிதத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்ட Nacomox Capsules மருந்தை 2 வது எதிரியிடமிருந்து பில் எண்கள் NL00039, நாள்.26.08.2013 மற்றும் NL00047, நாள்.16.09.2013 ஆகியவற்றின் வாயிலாக வாங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார். அந்த பில்கள் அ.சா.ஆ 60 மற்றும் 61 ஆகும். 3 வது எதிரி கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் 24.01.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை 2 வது எதிரிக்கு, படிவம் 13 நகலுடன் பதிவு தபாலில் அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.62 ஆகும்.

20. 24.01.2014 நாளிட்ட குறிப்பாணைக்கு 31.01.2014 நாளிட்ட பதில் கடிதத்தை ஆவணங்களுடன் 2 வது எதிரி சமர்ப்பித்தார். அந்த பதில் கடிதம் எனக்கு 10.02.2014 அன்று கிடைத்தது. அந்த கடிதம் அ.சா.ஆ.63 ஆகும். 2 ஆம் எதிரி Nacomox மருந்தை 1 வது எதிரி நிறுவனத்திடமிருந்து பில் எண்.IA143 நாள்.20.07.2013 இன் வாயிலாக வாங்கியதற்கான பில்லை இணைத்திருந்தார். அந்த பில் அ.சா.ஆ. 64 ஆகும். மேற்படி மருந்துக்கான தொகையை கரூர் வைஸ்யா வங்கி காசோலை மூலம் 1 வது எதிரி நிறுவனத்திற்கு வழங்கியதாகவும், அந்த காசோலை தனது வங்கி கணக்கில் 23.07.2013 அன்று பற்று செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவித்திருந்தார். அவருடைய வங்கி கணக்கின் கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ .65 ஆகும்.

21. அந்த 2 வது எதிரியின் பதில் கடிதத்தின் அடிப்படையில், 1 வது எதிரிக்கு 10.02.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை படிவம் 13 அசலுடன் அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.66 ஆகும். அதே நாள் 1 ஆம் எதிரிக்கு பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட Nacomox மருந்தின் மாதிரியின் ஒரு பகுதியையும் பதிவுப் பார்சலில் அனுப்பி வைத்திருந்தேன். அதற்கான கடிதத்தின் நகல் அ.சா.ஆ.67 ஆகும்.

22. 1 ஆம் எதிரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த Nacomox மருந்து பார்சல் 1 வது எதிரியின் நிறுவனம் மூடப்பட்டிருந்ததாக தபால்துறையினரால் குறிப்பிடப்பட்டு, திருப்பப்பட்டு, 18.02.2014 அன்று எனக்கு கிடைக்கப்பெற்றது. அது அ.சா.ஆ.68 ஆகும். அந்த

பார்சலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் (RPR 35/15, தற்போது 2/24). 1வது எதிரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த குறிப்பாணை 1வது எதிரி நிறுவனம் மூடப்பட்டிருந்ததாக தபால்துறையினரால் குறிப்பிடப்பட்டு, திருப்பப்பட்டு, 20.2.2014 அன்று எனக்கு கிடைக்கப்பெற்றது. அந்த திருப்பப்பட்ட குறிப்பாணைஅ.சா.ஆ.69.

23. நான் 1ஆம் எதிரிக்கு அனுப்பிய மாதிரி மருந்து பார்சல் தபால்துறையினரால் திருப்பப்பட்டதால், மேற்படி 1ஆம் எதிரி நிறுவனம் இயங்கி வந்த மகியா தொழிற்சாலை வளாகத்திற்கு 18.02.2014 இல் நான் நேரில் சென்று பார்வையிட்டேன். நான் பார்த்த போது 1வது எதிரி நிறுவனம் மூடியிருந்தது. அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. நான் 1ஆம் எதிரிக்கு அனுப்பிய குறிப்பாணையானது தபால் துறையினரால் திருப்பப்பட்டு 20.02.2014 எனக்குக் கிடைக்கப்பெற்றதும், அன்றைய தினம் மாலை 4.00 மணியளவில் நேரில், மேற்படி தொழிற்சாலை வளாகத்தின் அலுவலகத்திற்கு சென்று, அங்கு மேலாளர் என்று சொல்லப்பட்ட திருமதி அஸ்மத் என்பவரிடம் 1ஆம் எதிரி நிறுவனம் குறித்து விசாரித்தேன்.

24. மேற்படி தொழிற்சாலை வளாகத்தின் மேலாளர் என்று சொல்லப்பட்ட திருமதி. அஸ்மத், 1வது எதிரி நிறுவனம் 24.6.2013 அன்றே அந்த தொழிற்சாலை வளாகத்திலிருந்து காலி செய்யப்பட்டு விட்டதாகக் கூறினார். அது சம்பந்தமாக 1வது எதிரி நிறுவனம் செட் எண்கள். 89 மற்றும் 90 செட்களில் இயங்கி வந்ததாகவும், அந்த செட் எண். 89 ராஜ்குமார் என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும், அதனை ராஜ்குமார் 1வது எதிரி நிறுவனத்திற்கு வாடகைக்குக் கொடுத்திருந்ததாகவும், செட் எண். 90 நாச்சியப்பன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும், அதனை நாச்சியப்பன் 1வது எதிரி நிறுவனத்திற்கு வாடகைக்குக் கொடுத்திருந்ததாகவும் கூறினார்.

25. நான் மகியா தொழிற்சாலை வளாகத்தின் மேலாளரிடம் விசாரித்த போது, சில ஆவணங்களின் நகல்களை அவர் சான்றொப்பம் செய்து என்னிடம் வழங்கினார். அதனை 20.02.2014 நாளிட்ட ஒரு குறிப்பு மூலம் நான் பெற்றுக்கொண்டேன். அந்த 20.02.2014 நாளிட்ட குறிப்பு கடிதம் அ.சா.ஆ.70 ஆகும். செட் எண்.90 இன் உரிமையாளர் நாச்சியப்பன் என்பவர் 1ஆம் எதிரி

26.04.2013 இல் தனது செட்டை காலி செய்து மீண்டும் தன்னிடம் ஒப்படைத்துவிட்டதாகக் கூறி 5.7.2013 நாளிட்ட கடிதம் ஒன்றை அந்த தொழிற்சாலை வளாகத்தின் தலைவருக்கு எழுதியது அ.சா.ஆ.71 ஆகும். 1 வது எதிரி செட் எண். 89 மற்றும் 90 ல் இயங்கி வந்த தனது தொழிற்சாலையை காலி செய்துவிட்டதாக தெரிவித்து கட்டிட உரிமையாளர்களுக்குக் கொடுத்த கடிதம் அ.சா.ஆ. 72 ஆகும். செட் எண்.89 இன் உரிமையாளர் ராஜ்குமார் என்பவர் அந்த செட்டின் கழிவுகளை அகற்றுவது குறித்து தொழிற்சாலை வளாகத்தின் செயலாளருக்குக் 09.07.2013 நாளிட்டு கொடுத்த கடிதம் அ.சா.ஆ. 73 ஆகும். மகியா தொழிற்சாலை வளாகத்தின் மேலாளர் அஸ்மத் அவர்கள் சான்றொப்பம் செய்த செட் எண். 89 மற்றும் 90–ன் உரிமையாளரின் முகவரிகள் அ.சா.ஆ. 74 ஆகும்.

26. 1 ஆம் எதிரி நிறுவனத்திற்கு மருந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்ட காலத்திற்குப் பின்னும் 1 ஆம் எதிரியால் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்பட்ட மருந்துகளை வாங்கி இருப்பு வைத்திருந்து, விற்பனை செய்த செயல்களை குறித்து விளக்கம் கேட்டு 2 வது எதிரிக்கு 12.02.2014 நாளிட்ட குறிப்பாணை ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.75. 2 வது எதிரி 17.2.2014 நாளிட்ட பதில் கடிதம் ஒன்றும் அதனுடன் குறிப்பாணையில் கோரப்பட்ட ஆவணங்களையும் சமர்ப்பித்தார். அந்த பதில் அ.சா.ஆ.76 ஆகும்.

27. அந்த பதில் விளக்கக் கடிதத்தில் Profital சிரப் மருந்தை 2 வது எதிரி 7 வது எதிரியிடமிருந்து பில் எண்.110, நாள் 08.6.2013–இன் வாயிலாக வாங்கியதற்கான பில்லை இணைத்திருந்தார். அந்த பில் அ.சா.ஆ. 77 ஆகும். மேலும் தன்னுடைய விளக்கத்தில் 1 வது எதிரியிடமிருந்து Nacomox மருந்தை பில் எண்.IA143. நாள் 20.7.2013–ன் படியும், Naccold Syrup மற்றும் Mangogerol Syrup மருந்துகளை பில் எண். IA 142, நாள் 19.7.2013–ன் படியும், Naccold plus மருந்தினை பில் எண். IA180, நாள் 9.9.2013–ன் படியும், Nacold Drops மருந்தினை பில் எண். IA196, நாள் 4.10.2013–ன் படியும், Diltus Syrup மருந்தை பில் எண். IA191. நாள் 26.9.2013–ன் படியும் வாங்கியதற்கான பில்களை இணைத்திருந்தார். அந்த 5 பில்களும் என்னிடம் காட்டப்படுபவைகள்தான். அவைகள் அ.சா.ஆ 78, 79, 80, 81 மற்றும் 82 ஆகும்.

28. மேற்கூறப்பட்ட பில்களுக்கான தொகைகளை 2வது எதிரி 7வது மற்றும் 1வது எதிரிகளுக்கு கரூர் வைஸ்யா வங்கி காசோலை மூலம் செலுத்தியதாகக் கூறி அதற்கான வங்கி கணக்கு பட்டியலை சமர்ப்பித்திருந்தார். அந்த வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ 83 ஆகும். அ.சா.ஆ 77 பில்லுக்கான தொகை ரூ.8,692/- 08.07.2013 அன்றும், அ.சா.ஆ 78 பில்லுக்கான தொகை ரூ.21,518/- 23.7.2013 அன்றும், அ.சா.ஆ 79 பில்லுக்கான தொகை ரூ.16,203/- இரண்டு காசோலைகள் மூலம் 12.8.2013 மற்றும் 17.8.2013 அன்றும், அ.சா.ஆ 80 பில்லுக்கான தொகை ரூ.9,336/- 17.10.2013 அன்றும், அ.சா.ஆ 82 பில்லுக்கான தொகை ரூ.11,380/- 31.10.2013 அன்றும் பற்று செய்யப்பட்டுள்ளது தெரிய வந்தது. அ.சா.ஆ 81 பில்லுக்கான தொகை ரூ.9,614/- Stop Payment செய்யப்பட்டுள்ளது.

29. 1ஆம் எதிரி நிறுவனத்திற்கு மருந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்ட கால்ததிற்குப் பின்னும் 1ஆம் எதிரியால் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்பட்ட மருந்துகளை வாங்கி இருப்பு வைத்திருந்து, விற்பனை செய்த செயல்களை குறித்து 7வது எதிரிக்கு விளக்கம் கோரி 10.3.2014 நாளிட்ட குறிப்பாணை ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.84. அந்த குறிப்பாணைக்கு 18.3.2014 நாளிட்ட பதில் கடிதம் ஒன்றை ஆவணங்களுடன் 7வது எதிரி எனக்கு அனுப்பினார், அது 20.3.2014 அன்று எனக்கு கிடைக்கப் பெற்றது. அந்த பதில் கடிதம் அ.சா.ஆ 85. அந்த பதில் கடிதத்துடன் இணைக்கப்பட்ட மருந்து கொள்முதல் பில்படி 1வது எதிரியிடமிருந்து 7ஆம் எதிரி Profital சிரப் மருந்தை வாங்கிய விபரம் தெரிய வந்தது. அந்த கொள்முதல் பில் எண்.IA96 நாள்.08.06.2013. இது அ.சா.ஆ. 86 ஆகும். 7ஆம் எதிரி வாங்கிய மருந்தை 2வது எதிரிக்கு 8.6.2013 நாளிட்ட பில் எண்.110 மூலம் விற்பனை செய்திருந்தார். அந்த விற்பனை பில் அ.சா.ஆ. 87 ஆகும். 7ஆம் எதிரி 1ஆம் எதிரிக்கு மருந்துக்கான தொகையை UCO வங்கி காசோலை எண்.698793, நாள்.01.07.2013 மூலம் வழங்கியதாகத் தெரிவித்திருந்தார். அந்த கடிதம் அ.சா.ஆ. 88 ஆகும்.

30. 3வது மற்றும் 4வது எதிரிகளிடமிருந்து நான் பகுப்பாய்விற்காகவும் மற்றும் பறிமுதல் செய்த மருந்துகள் மே-2013 மற்றும் ஜூலை-2013 இல் தயாரிக்கப்பட்டிருந்ததாக அதன்

லேபிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே, 1ஆம் எதிரி நிறுவனம் இயங்கி வந்த கட்டிடத்தின் ஒரு பகுதியின் செட்எண்.89–ன் உரிமையாளர் திரு. ராஜ்குமார் அவர்களிடம், 1வது எதிரி நிறுவனம் அந்த செட்டிலிருந்து எப்போது காலி செய்யப்பட்டது என்று கேட்டு, 10.3.2014 நாளிட்ட கடிதம் ஒன்றை வழங்கினேன். அந்த நகல் அ.சா.ஆ.89. ராஜ்குமார் அவர்கள் 1வது எதிரி செட் 89ஐ காலி செய்ததற்காக செட் உரிமையாளர்களுக்குக் கொடுத்த கடிதத்தின் நகலை அவர் சான்றொப்பம் செய்து எனக்குக் கொடுத்தார். அந்த 24.06.2013 நாளிடப்பட்டிருந்த 1ஆம் எதிரியின் கடிதத்தின் நகல் அ.சா.ஆ.90.

31. செட் எண் 90ன் உரிமையாளர் திரு.நாச்சியப்பன் அவர்களிடம் 20.3.2014 அன்று 1வது எதிரி செட் 90ஐ எப்போது காலி செய்தார் என்று நேரில் கேட்டேன். அது சம்பந்தமாக திரு. நாச்சியப்பன் அவர்கள் மகியா தொழிற்பேட்டைத் தலைவருக்கு கொடுத்த 05.07.2013 நாளிட்ட கடிதத்தின் நகல் ஒன்றை அவர் சான்றொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார். அந்த கடிதத்தில் 1ஆம் எதிரியானவர் 24.06.2013இல் நாச்சியப்பன் அவர்களிடம் செட்டை ஒப்படைப்பு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த கடிதம் அ.சா.ஆ. 91 ஆகும். மேலும், 1ஆம் எதிரி அந்த செட்டை காலி செய்ததாக 24.6.2013 நாளிட்டு செட்டின் உரிமையாளர்களுக்குக் கொடுத்த கடிதத்தின் நகல் ஒன்றையும் அவர் சான்றொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார். அந்த கடிதம் அ.சா.ஆ 92 ஆகும்.

32. அரசு தரப்பு சான்றாவணம் 76 உடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் விபரங்களை பரிசீலனை செய்தேன். அதில் 3 மற்றும் 4வது எதிரிகள் வாங்கிய மற்றும் விற்பனை மருந்துகள் குறித்த சில விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அது குறித்து 20.3.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணையை 3 மற்றும் 4 எதிரிகளுக்கு தனித்தனியாக அனுப்பினேன். 3ஆம் எதிரிக்கு அனுப்பிய குறிப்பாணை அ.சா.ஆ.93 ஆகும். 4ஆம் எதிரிக்கு அனுப்பிய குறிப்பாணை அ.சா.ஆ.94. ஆகும்.

33. அந்த குறிப்பாணைக்கு 4ஆம் எதிரி நிறுவனத்திடமிருந்து 31.3.2014 நாளிட்ட பதில் ஒன்று ஆவணங்களுடன் எனக்குக் கிடைக்கப்பெற்றது. அந்த பதிலில் மருந்து கொள்முதல், விற்பனை சம்பந்தமாக கோரிய விபரங்களை முழுமையாக உரிய

ஆவணங்களுடன் சமர்ப்பித்திருந்தார். அந்த பதில் கடிதம் மற்றும் ஆவணங்கள் அ.சா.ஆ.95 (12 தாள்கள்) ஆகும். 3 ஆம் எதிரி நாள் குறிப்பிடப்படாத பதில் கடிதம் ஒன்றை ஆவணங்களுடன் அனுப்பியிருந்தார். அது எனக்கு 22.4.2014 அன்று கிடைத்தது. அதில் கோரப்பட்ட கொள்முதல் விற்பனை விபரங்களை முழுமையாகச் சமர்ப்பித்திருந்தார். அந்த பதில் கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அ.சா.ஆ.96 (12 தாள்கள்) ஆகும்.

34. 2 ஆம் எதிரிக்கு மருந்து விற்பனை விபரத்தை முழுமையாக தெரிவிக்க கோரி 11.4.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்பினேன். அந்த நகல் அ.சா.ஆ.97. அந்த குறிப்பாணைக்கு 2 ஆம் எதிரி 21.4.2014 நாளிட்ட பதில் ஒன்றை ஆவணங்களுடன் அனுப்பியிருந்தார். அந்த பதில் கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அ.சா.ஆ.98 (9 தாள்கள்) ஆகும். அதில் விற்பனை விபரங்களை 2 வது எதிரி முழுமையாகக் குறிப்பிட்டிருந்தார்.

35. மருந்து உரிமங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னரும் மருந்து தயாரித்து விற்பனை செய்தது குறித்து 1 வது எதிரிக்கு விளக்கம் கேட்டு 06.05.2014 நாளிட்ட குறிப்பாணை ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்பினேன். அது அ.சா.ஆ.99 ஆகும். அந்த குறிப்பாணை தபால் துறையினரால் 1 ஆம் எதிரி நிறுவனம் மூடப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டு திருப்பப்பட்டு விட்டது. திருப்பப்பட்டஅந்த தபால் உறை அ.சா.ஆ.100.

36. 1 வது எதிரி மதுரை ஒத்தக்கடையிலிருந்து மேலூர் செல்லும் மெயின் ரோட்டில் மெடிக்கான் பார்மா என்ற பெயரில் உணவுப் பாதுகாப்புதுறையில் உரிமம் பெற்று நிறுவனம் ஒன்று நடத்துவதாகத் தகவல் தெரிந்து, மேற்படி மெடிக்கான் பார்மா முகவரிக்கு 21.05.2014 நாளிட்ட இரண்டு குறிப்பாணைகளை பதிவுத்தபாலில் அனுப்பினேன். அதன் நகல்கள் அ.சா.ஆ.101, 102 ஆகும். ஆனால் அந்த இரண்டு விளக்கம் கேட்கும் குறிப்பாணைகளும் வாங்க மறுக்கப்பட்டதாக தபால் துறையால் திருப்பப்பட்டு விட்டது. அந்த திருப்பப்பட்ட தபால் உறைகள் அ.சா.ஆ.103 மற்றும் 104 ஆகும்.

37. மதுரை உணவு பாதுகாப்பு அலுவலகத்திற்கு மெடிக்கான் பார்மா நிறுவனத்தின் விபரங்களை கேட்டு 29.5.2014 அன்று கடிதம் ஒன்றை அனுப்பினேன். அதன் நகல் அ.சா.ஆ.105 ஆகும். 20.6.2014 நாளிட்ட மதுரை உணவு பாதுகாப்புதுறையின் நியமன அலுவலரின் பதில் கடிதம் இரண்டு தாள்கள் இணைப்புகளுடன் எனக்குக் கிடைக்கப்பெற்றது. அந்த பதில் கடிதம் மற்றும் அதன் இணைப்புகள் அ.சா.ஆ.106 ஆகும். அந்த பதில் கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின்படி 1ஆம் எதிரியின் மெடிக்கான் பார்மா நிறுவனத்தில் காப்சுல், சிரப், மாத்திரை தயாரிக்கக்கூடிய உபகரணங்கள் இருப்பதையும், உணவுப்பொருள்கள் தயாரிக்க 21.06.2013 இல் உரிமம் பெற்றிருப்பதையும் தெரிந்து கொண்டேன்.

38. 1வது எதிரி வங்கி கணக்கு வைத்திருந்த மதுரை மாவட்ட நீதிமன்ற கிளை இண்டியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளருக்கு, 1வது எதிரி நிறுவனத்தின் நடப்பு கணக்கு விபரங்கள் கேட்டு 04.07.2014 நாளிட்ட கடிதம் ஒன்றை அனுப்பினேன். அந்த கடிதம் அ.சா.ஆ.107.

39. அந்த கடிதத்திற்கு வங்கி மேலாளர் 10.07.2014 நாளிட்ட பதில் கடிதத்துடன் 01.6.2013 முதல் 31.12.2013 வரை உள்ள 1ஆம் எதிரி நிறுவனத்தின் நடப்புகணக்கு விபரங்களை அனுப்பியிருந்தார். அந்த கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட கணக்கு விபரங்கள் அ.சா.ஆ.108 மற்றும் 109 (9 தாள்கள்) ஆகும். 1 வது எதிரி மருந்து விற்பனை செய்ததற்கான பில் தொகைகள் அவருடைய நிறுவனத்தின் வங்கி நடப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த விபரங்கள் அந்த கணக்கு பட்டியலின்படி தெரியவந்தது.

40. 3ஆம் எதிரி நிறுவனத்தில் மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த Mangoferol Syrup ஐ தரமற்றது என 23.07.2014 நாளிடப்பட்ட படிவம் – 13 பகுப்பாய்வு அறிக்கை எனக்குக் கிடைக்கப் பெற்றது. அந்த அறிக்கை அ.சா.ஆ.110 ஆகும். ஆகவே, 31.07.2014 நாளிட்ட விளக்ககம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை 3வது எதிரிக்கு படிவம் – 13 ஒன்றுடன் நேரில் வழங்கினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.111. அன்றைய தினமே 3ஆம் எதிரி பதில் கடிதம் ஒன்றை கொள்முதல் மற்றும் விற்பனை ஆவணங்களோடு சமர்ப்பித்தார். அந்த பதில் கடிதம்

அ.சா.ஆ.112. அந்த பதில் கடிதத்தில் Mangoferol Syrup ஐ 2ஆம் எதிரியிடமிருந்து பில் எண். NL00039 நாள் 26.8.2013 –ன்படி வாங்கியதாக குறிப்பிட்டிருந்தார். அந்த கொள்முதல் பில் அ.சா.ஆ.113 ஆகும்.

41. ஆகவே 01.08.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை 2ஆம் எதிரிக்கு படிவம் 13 மற்றும் மாதிரியின் ஒரு பகுதியினையும் இணைத்து வழங்கினேன். அந்த குறிப்பாணை அ.சா.ஆ.114 ஆகும். அந்த குறிப்பாணைக்கு 2ஆம் எதிரி 04.8.2014 நாளிட்ட பதில் கடிதத்தினை கோரப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பித்தார். அந்த பதில் கடிதம் அ.சா.ஆ. 115. அந்த பதில் கடிதத்தில் Mangoferol Syrup ஐ 1ஆம் எதிரி நிறுவனத்திடமிருந்து பில் எண்:IA142, நாள்19.07.2013 ன்படி வாங்கியதற்கான பில்லை இணைத்திருந்தார். அந்த பில் அ.சா.ஆ 116 ஆகும்.

42. ஆகவே, 1வது எதிரிக்கு விளக்கம் கேட்டு 11.8.2014 நாளிட்ட குறிப்பாணை ஒன்றை பதிவு தபாலில் அனுப்பினேன். அதன் நகல் அ.சா.ஆ.117 ஆகும். அந்த குறிப்பாணை 1வது எதிரியின் நிறுவனம் மூடப்பட்டு விட்டதாக தபால் துறையினரால் திருப்பப்பட்டு விட்டது. அந்த தபால் உறை அ.சா.ஆ.118 ஆகும். தபால் திருப்பப்பட்டு விட்டதால் அதே குறிப்பாணையை 1வது எதிரியின் ஒத்தக்கடை விலாசத்திற்கு 22.8.2014 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பினேன். அந்த கடிதம் அ.சா.ஆ.119 ஆகும். ஆனால் அந்த தபால் வாங்க மறுக்கப்பட்டு விட்டதாக தபால் துறையினரால் திருப்பப்பட்டு விட்டது. திருப்பப்பட்ட தபால் உறை அ.சா.ஆ.120 ஆகும்.

43. பகுப்பாய்விற்காக 3வது எதிரியிடமிருந்து எடுக்கப்பட்ட Diltus Syrup மருந்து தரமற்றது என சென்னை அரசு பகுப்பாய்வாளரால் 18.9.2014 நாளிட்ட படிவம் 13 இன்படி அறிவிக்கப்பட்டது. அவ்வறிக்கை 24.09.2014 இல் எனக்கு கிடைக்கப் பெற்றது. அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.121 ஆகும்.

44. ஆகவே, 3வது எதிரிக்கு 25.9.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை படிவம் 13 ஒன்றுடன் வழங்கினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.122 ஆகும். அன்றைய தினமே 3வது எதிரி அதற்கான பதிலை கோரப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பித்தார். அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.123

ஆகும். அந்த பதிலில் அந்த மருந்தை 2 ஆம் எதிரியிடமிருந்து பில் எண் NL00051, நாள் 27.09.2013–ன்படி வாங்கியதாகக் கூறினார். அந்த பில் அ.சா.ஆ. 124 ஆகும்.

45. ஆகவே 29.09.2014 நாளிட்ட விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை 2 ஆம் எதிரிக்கு படிவம் 13 மற்றும் மாதிரியின் ஒரு பகுதியினையும் இணைத்து வழங்கினேன். அந்த குறிப்பாணை அ.சா.ஆ.125 ஆகும். அந்த குறிப்பாணைக்கு 2 ஆம் எதிரி 30.09.2014 நாளிட்ட பதில் கடிதத்தினை கோரப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பித்தார். அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.126 ஆகும். அந்த பதிலுடன் Diltus Syrup ஐ 1 ஆம் எதிரி நிறுவனத்திடமிருந்து வாங்கியதற்கான கொள்முதல் பில் எண்:IA191, நாள்.26.09.2013 யை இணைத்திருந்தார். அந்த பில் அ.சா.ஆ 127 ஆகும்.

46. எனவே 1 வது எதிரி நிறுவனத்திற்கு 07.10.2014 அன்று விளக்கம் கேட்டு குறிப்பாணை ஒன்றை பதிவு தபாலில் பழைய விலாசத்திற்கு அனுப்பினேன். அந்த குறிப்பாணையின் நகல் அ.சா.ஆ.128 ஆகும். அந்த குறிப்பாணை தபால் துறையினரால் நிறுவனம் மூடப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டு திருப்பப்பட்டு விட்டது. திருப்பப்பட்ட தபால் உறை அ.சா.ஆ.129 ஆகும். அதே குறிப்பாணை நகலை 17.10.2014 நாளிட்ட கடிதத்துடன் 1 ஆம் எதிரியின் ஒத்தக்கடை விலாசத்திற்கு அனுப்பினேன். அதன் நகல் அ.சா.ஆ.130. ஆனால் அந்த கடிதம் தபால் துறையினரால் திருப்பப்பட்டு விட்டது. திருப்பப்பட்டஅந்த தபால் உறை அ.சா.ஆ.131.

47. 4 வது எதிரி நிறுவனத்திடமிருந்தும் Mangoferol Syrup மற்றும் Diltus Syrup பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. பகுப்பாய்வு அறிக்கையில் அந்த சிரப் தரமற்றது என அறிக்கை கிடைக்கப் பெற்றதால், 4 ஆம் எதிரிக்கு விளக்கம் கேட்டு 8.12.2014 நாளிட்ட குறிப்பாணை ஒன்றை படிவம் – 13 இன் நகல்களுடன் 6 ஆம் எதிரியிடம் வழங்கினேன். அதன் நகல் அ.சா.ஆ.132. அந்த குறிப்பாணைக்கு 4 ஆம் எதிரி கொரியர் சர்வீஸ் மூலம் 20.12.2014 நாளிட்ட பதில் கடிதம் அனுப்பியிருந்தார். அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.133 ஆகும்.

48. 1 ஆம் எதிரி நிறுவனம் மருந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னரும், நிறுவனம்

மூடப்பட்ட பின்னரும் தரமற்ற மருந்துகளை தயார் செய்து விற்பனை செய்தது தெரிந்ததால், 1ஆம் எதிரி நிறுவனம் குறித்து சில விபரங்களை கோரி மதுரை மண்டல மருந்து கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் அவர்களுக்கு 07.07.2014 நாளிட்ட கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன். அக்கடிதம் அ.சா.ஆ 134 ஆகும்.

49. அதற்கு 4.8.2014 நாளிட்ட மதுரை மண்டல மருந்து கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் கடிதத்துடன், 1ஆம் எதிரி மருந்து நிறுவனம் சம்பந்தப்பட்ட மருந்து உரிமங்கள் படிவம் 26 (2 பக்கம்), 25, 28 ஆகியவற்றின் நகல்கள், 1ஆம் எதிரியின் குடும்ப அட்டை நகல், 18.4.2013 அன்று 1ஆம் எதிரி தன்னுடைய நிறுவனத்தின் மருந்து தயாரிக்கும் உரிமத்தை ரத்து செய்யக்கோரி சென்னை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநருக்கு அனுப்பிய கடித நகல் மற்றும் 28.04.2014 நாளிட்ட மருந்து கட்டுப்பாடு இயக்குநரின் கடிதம் ஆகியன இணைத்து எனக்கு வழங்கப்பட்டது. அந்த 04.08.2014 நாளிட்ட மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநரின் கடிதம் அ.சா.ஆ.135 ஆகும். 1ஆம் எதிரி நிறுவனத்தின் மருந்து உரிமங்களின் நகல்கள் அ.சா.ஆ.136 ஆகும். 1 ஆம் எதிரியின் குடும்ப அட்டை நகல் அ.சா.ஆ.137 ஆகும். 1ஆம் எதிரியின் 18.4.2013 நாளிட்ட கடித நகல் அ.சா.ஆ.138 ஆகும். மருந்து கட்டுப்பாடு இயக்குநரின் 28.04.2014 நாளிட்ட கடித நகல் அ.சா.ஆ. 139 ஆகும்.

50. 1ஆம் எதிரி நிறுவனத்திற்கு மருந்து கட்டுப்பாடு இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்கள் 28.03.2013 நாளிட்ட செயல் முறை ஆணையின் வாயிலாக மருந்து உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்கு உடனடியாகத் தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரும், 1ஆம் எதிரி, அவர்தம் நிறுவனத்தின் மருந்து உரிமங்களை உடனடியாக இரத்து செய்யும்படி 18.4.2013 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மருந்து கட்டுப்பாடு இயக்குநருக்கு மருந்துகள் உரிமங்களை ஒப்படைத்தப் பின்னரும், 1ஆம் எதிரி தான் நடத்தி வந்த நிறுவனத்தினை காலிசெய்து, இடத்தை 24.06.2013 இல் இடத்தின் உரிமையாளர்களிடம் ஒப்படைத்த பின்னரும், மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருள்கள் சட்ட விதிகளை மீறி மே 2013 மற்றும் ஜூலை 2013 இல் மருந்துகளை உற்பத்தி செய்தும், அக்டோபர் 2013 வரை அவற்றினை 2ஆம் மற்றும் 7ஆம் எதிரிகளுக்கு விற்பனை செய்துள்ளதும், 7ஆம் எதிரி

2 ஆம் எதிரிக்கு விற்பனை செய்துள்ளதும், 2 ஆம் எதிரி 3 ஆம் எதிரிக்கும், 4 ஆம் எதிரி நிறுவனத்திற்கும் விற்பனை செய்துள்ளதும், அவற்றில் Nacomox Capsule மருந்து போலியானது என்றும், Mangoferol மற்றும் Diltus மருந்துகள் தரமற்றவை என எனது புலனாய்வில் தெரிய வந்ததால், ஒரு விரிவான 15.12.2014 நாளிட்ட கருத்துரு தயாரித்து சென்னை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகத்திற்கு அனுப்பி குற்ற வழக்கு தாக்கல் செய்ய அனுமதியும் கேட்டிருந்தேன். அந்த கருத்துரு அ.சா.ஆ. 140 (27 பக்கங்கள்) ஆகும்.

51. என்னுடைய கருத்துருவை பரிசீலனை செய்து சென்னை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகம் 4.2.2015 நாளிட்ட கடிதம் வாயிலாக மேற்படி எதிரிகளின் மீது வழக்கு தொடர அனுமதி கடிதம் வழங்கியது. அந்த அனுமதி கடிதம் அ.சா.ஆ.141 ஆகும். அந்த அனுமதி கடிதத்தில் கூறப்பட்டுள்ள சட்டவிதி மீறல்களுக்கு, மேற்படி 1 முதல் 8 வரையிலான எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இவ்வழக்கினைத் தாக்கல் செய்தேன்.

52. இவ்வழக்கில் தரமற்ற மருந்துகளாக அறிவிக்கப்பட்டவைகளை RPR எண்: 34/15 ஆகவும் (தற்பொழுது 1/24), பறிமுதல் செய்யப்பட்ட மருந்துகளை RPR எண்:36/15 ஆகவும் (தற்பொழுது 3/24) நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். மாதிரி மருந்துகளுக்கான தொகைகள் 3 வது மற்றும் 4 வது எதிரிகளுக்கு மீள வழங்கப்பட்டு விட்டது. அது அ.சா.ஆ. 142 ஆகும்.

அரசு பகுப்பாய்வாளரால் தரமற்ற மருந்துகளாக அறிவிக்கப்பட்ட மருந்துகளான,

1. Diltus Syprup, தொ.எண்:DLO13. எண்ணம்: 2x1x60ml ... M.O. – 1
2. Magnoferol Syrup. தொ.எண்:MF004. எண்ணம்: 1x200ml ……… M.O. – 2
3. Nacomox Capsule, தொ.எண்:NM003, எண்ணம்: 1 (10x10's) ………… M.O. – 3

1 ஆம் எதிரி நிறுவனம் மூடுப்பட்டதாக குறிப்பிட்டு தபால் துறையினரால் திருப்பப்பட்ட பார்சல்

4. Nacomox Capsule, தொ.எண்:NM003, எண்ணம்: 1 (10x10's) ………… M.O. – 4

3 ஆம் எதிரியிடம் பறிமுதல் செய்யப்பட்ட மருந்துகளான

5. Diltus Syprup, தொ.எண்:DLO13. எண்ணம்: 75x1x60ml ………… M.O. – 5
6. Nacomox Capsule, தொ.எண்:NM003, எண்ணம்: 36x1x10's ………… M.O. – 6
7. Naccold Syrup, தொ.எண்:NP007, எண்ணம்: 50x1x60ml ………… M.O. – 7
8. Naccold drops, தொ.எண்:NDS008, எண்ணம்: 133x1x15ml ………… M.O. – 8
9. Profital Syrup, தொ.எண்:PF003, எண்ணம்: 60x1x200ml ………… M.O. – 9
10. Mangoferol Syrup. தொ.எண்:MF004. எண்ணம்: 30x1x200ml ………… M.O. – 10
11. Naccold Plus Suspension, தொ.எண்:NS015, எண்ணம்: 85x1x60ml … M.O. – 11

4 ஆம் எதிரி நிறுவனத்திடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட மருந்துகளான

12. Mangoferol Syrup. தொ.எண்:MF004. எண்ணம்: 30x1x200ml …… M.O. – 12
13. Profital Syrup, தொ.எண்:PF003, எண்ணம்: 6x1x200ml ……… M.O. – 13
14. Naccold drops, தொ.எண்:NDS008, எண்ணம்: 145x1x15ml …… M.O. – 14
15. Naccold Syrup, தொ.எண்:NP007, எண்ணம்: 136x1x60ml ………… M.O. – 15
16. Naccold Plus Suspension, தொ.எண்:NS015, எண்ணம்: 91x1x60ml … M.O. – 16
17. Diltus Syprup, தொ.எண்:DLO13. எண்ணம்: 115x1x60ml ……… M.O. – 17 ஆகியவைகள்.

எ.த.கு.வி இரு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க 28.11.2024 அன்று குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 21.11.2024 அன்று வியாழன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.11.21 19:07:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
21.11.2024